அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி அலுவலகத்தில், 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் வாகனத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் மற்றும் பலர் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.7.2025) சென்னையில் நடைபெற்ற சத்யபாமா பல்கலைக்கழகத்தின் வேந்தர் திருமதி மரியஜீனா ஜான்சன் – தலைவர் மரிய ஜான்சன் தம்பதியரின் மகள் மரிய கேத்தரின் ஜெயப்பிரியா – ரா. ஆகாஷ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின், திருமதி ரெமிபாய் ஜேப்பியார் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

ஜூலை 15,16 தேதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் சிறப்பான வரவேற்பு!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மயிலாடுதுறை. ஜூலை. 14-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க செயல் குழு கூட்டம் மயிலாடுதுறை பாம்ஸ் ஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி. சீனிவாசன் தலைமை தாங்கினார். கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், முன்னிலை வகித்தார். கூட்டத்தில் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் கூட்டம் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து பேசினார்.

கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில். சீர்காழி சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் சீர்காழி தொகுதி எம்.தினேஷ்குமா, மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை. சௌமியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி. சத்தியசீலன், எம்.எம்.சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்ல சேதுரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், மங்கை எம்.சங்கர், என்.இளையபொருமாள், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், மூவலூர் எம்.மூர்த்தி, ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சு குமார், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, ஞான. இமையநாதன், ப.முருகமணி, நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராய பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், அ. காந்தி, எஸ்.சங்கரநாராயணன், ஜெ.கபிலன், வைத்தீஸ்வரன்கோயில் எஸ். சுவாமி நாதன்சுபாநெடுஞ்செழியன், நத்தம் ஏ.வின்சென்ட், ஹர்ஷத், பேரூர் கழகச் செயலாளார்கள் எம்.அன்புச்செழியன், எஸ். கே.முத்துராஜா, அண்ணாதுரை மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே.மருது, வி.எஸ். என்.செந்தில், பெரு.வீரமணி, ஆர்.எஸ்.ஸ்ரீதர், ஆர்.சாந்தி, க.அறிவுச்செல்வன், காளி.தேசப்பன், டி.ராஜ்குமார், இரா. மனோகரன், திபா.சத்தியேந்திரன், வி.எஸ்.பிரபாகர், எம்.எஸ். முத்துகுபேந்திரன், எஸ். எம்.சம்சுதீன், காழி.கலைவாணன், மா.வைத்திய நாதன், வெடி எஸ்.பாலமுருகன், இரா.தனராஜ், இரா. முருகன், இரா.செல்வராஜ், கே.விக்னேஷ், கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்று வரும் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை முகாமை கழகத்தினர் தொய்வின்றி தினம் தோறும் கழகத்தினர் வீடு வீடாக சென்று திராவிட மாடல் அரசின் திட்டங்களை எடுத்துக் கூறி கழகத்தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள இலக்கை எட்டிடும் வகையில் அதிக அளவில் கழகத்திற்கு உறுப்பினர் சேர்க்கையை செய்திட வேண்டும் என்றும், இந்த பணியில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களுடன் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர், சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், வாக்குச் சாவடி முகவர்கள். உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர்மன்ற , பேரூராட்சி மன்ற தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு உறுப்பினர் சேர்க்கையை செய்திட வேண்டும் என்றும்,

கழகத்தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் வரும் 15.7.2025 மற்றும் 16.7.2025 அன்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில் கொள்ளிடம் மேற்கு ஒன்றியம், சீர்காழி கிழக்கு ஒன்றியம், மயிலாடுதுறை நகரம், குத்தாலம் கிழக்கு ஒன்றியம் ஆகிய இடங்களில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் சிலை திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள சிதம்பரத்தில் இருந்து வருகை தரும் கழகத்தலைவருக்கு மாவட்ட எல்லையான கொள்ளிடத்தில் புதிய விழுப்புரம் சாலையில் மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெறும் மாபெரும் வரவேற்பு நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் பொதுக்குழு உறுப்பினர், சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், . உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர்மன்ற, பேரூராட்சி மன்ற தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்றும்,

கழகத் தலைவருக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து நிகழ்சசி நடைபெறும் இடம் மற்றும் வழி நெடுங்கிலும் எழுச்சியுடன் வரவேற்ப்பு அளிப்பது என்றும், கழகத்தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் தளபதி, காக இளைஞர் அணி செயலாளர், துணை முதுல்வர் ஆகியோரின் ஆணைக்கினங்க மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூரில் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் நான்காண்டு சாதனை விழா தெரு முனை பிரச்சார கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணியினருக்கும், கூட்டத்தை நடத்திட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களக்கும், கலந்து கொண்ட அனைத்து கழக நிர்வாகிகளுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும், குறுவை சாகுபடிக்காக இந்த ஆண்டு ஜுன் 12ம் தேதி மேட்டூர் அணையையும், ஜுன் 15ம் தேதி கல்லணையையும் தனது திருக்கரங்க ளால் காவிரி டெல்டா பாசனதிற்கு தண்ணீரை திறந்திட்ட கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

திருவாரூர் மாவட்டம் – நீடாமங்கலம் – தெற்கு ஒன்றியம்

கழக முன்னோடி செருமங்கலம் க.இராமலிங்கம் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர்,ஜூலை-14.

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் தெற்கு ஒன்றியம்,செருமங்கலம் பெரியார் நகரை சேர்ந்த கழக முன்னோடி, முன்னாள் கிளைக்கழக செயலாளர் க.இராமலிங்கம் (வயது71) அவர்கள் உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறைந்த க.இராம லிங்கம் அவர்கள் கழகத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று தீவிர கழகப்பணியாற்றிவந்தராவார்.

மறைந்த க.இராம லிங்கம் அவர்களின் உடலுக்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஓரத்தநாடு பி.இராச மாணிக்கம்,மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ், நீடாமங்கலம் தெற்கு ஒன்றிய செயலாளர் நா.கவியரசு, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வீர.தேசபந்து, முன்னாள் அமைப்பாளர் சிவா.இராமமூர்த்தி, ஒன்றிய பொருளாளர் மோகனதாசு, மாவட்ட பிரதிநிதி கள் கோபி, கருணாநிதி, செந்தில்குமார், எம்.என்.பாரதிமோகன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பகலவன், கிளை செயலாளர் கருப்பையா மற்றும் கழக முன்னோடி கள், கழக சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலை தெரிவித்தனர்.

நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா, கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெரு முனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா பேசினார். உடன் மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர்.மணிவண்ணன், ஒன்றியக் கழகச் செயலாளர் சோ.பா.மலர்வண்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, பொதுக்குழு உறுப்பினர் கோசி.குமார், ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் ஆர்.ஜி.தமிழரசின் மற்றும் பலர் உள்ளனர்

வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில்

ரூ.4.86 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

பெரம்பலூர், ஜூலை,14-

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நல்லறிக்கை, காடூர், புதுவேட்டைக்குடி, கைப்பெரம்பலூர், கி.குடிக்காடு, பழைய அரசமங்கலம், வடக்கலூர், காருகுடி, சின்னபரவாய், எழுமூர், பீல்வாடி, சித்தளி ஆகிய கிராமங்களில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், ரூ.4.86 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்ட ப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் கனிமங்கள் மற்றும் சுரங்க நிதியின் கீழ் காடூர், புதுவேட்டைக்குடி, வடக்கலூர் ஆகிய இடங்களில் தலா ரூ.9.15 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி, முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நல்லறிக்கை முதல் இலுப்பையூர் வரை ரூ.99.90 லட்சம் மதிப்பீட்டிலும், நல்லறிக்கை முதல் புதுக்குடிசை வரை ரூ.60 லட்சம் மதிப்பீட்டிலும், புதுவேட்டைக்குடி - பெண்ணகோணம் சாலை முதல் கீழக்குடிக்காடு வரை ரூ.92.80 லட்சம் மதிப்பீட்டிலும், கிழுமத்தூர் குடிக்காடு முதல் கைப்பெரம்பலூர் வரை ரூ.48.00 லட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்படுத்தும் பணியினையும், அயோத்திதாசர் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதுவேட்டைக்குடியில் ரூ.16.45 லட்சம் மதிப்பீட்டில் 470 மீட்டர் தூரமுள்ள ஆதிதிராவிடர் மயான சாலையினை மேம்படுத்தும் பணியினையும், காருகுடி ஆதிதிராவிடர் தெருவில் ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் வீட்டு குழாய் இணைப்பு வழங்கும் பணியினையும், சித்தளி ஊராட்சியில் பீல்வாடி முதல் ஆதிதிராவிடர் மயானம் வரை ரூ.16.10 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியினையும்,15வது நிதிக்குழு மானியத்தின் மூலம் காருகுடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.5.92 லட்சம் மதிப்பீட்டில் சுகாதார வளாகம் அமைக்கும் பணியும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊராட்சி பொதுநிதியின் கீழ் புதுவேட்டைக்குடி ஊராட்சி மாரியம்மன் கோவில் முதல் ஆதிதிராவிடர் தெரு வரை ரூ.3.50 லட்சம் மதிப்பீட்டில் பைப்லைன் அமைக்கும் பணி, கைப்பெரம்பலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.5.92 லட்சம் மதிப்பீட்டில் மகளிர் சுகாதார வளாகம் மற்றும் ரூ.4.96 லட்சம் மதிப்பீட்டில் ஆண்கள் சுகாதார வளாகம் அமைக்கும் பணியினையும், கிழுமத்தூர் குடிக்காடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.5.92 லட்சம் மதிப்பீட்டில் சுகாதார வளாகம் மற்றும் ரூ.4.96 லட்சம் மதிப்பீட்டில் ஆண்கள் கழிவறை அமைக்கும் பணியினையும், பழைய அரசமங்களத்தில் 80 குடும்பங்களுக்கு பைப்லைன் மற்றும் வீட்டு குழாய் இணைப்பு வழங்கும் பணியினையும், சின்னபரவாய் கிராமத்தில் செங்கமலை வீடு முதல் சின்னப்பொண்ணு வீடு வரை ரூ.7.50 லட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் கால்வாய் மற்றும் கவர் ஸ்லாப் அமைக்கும் பணியினையும், எழுமூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் தலா ரூ.4.16 லட்சம் மதிப்பீட்டில் கழிப்பறை அமைக்கும் பணியினையும்,

பீல்வாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலா ரூ.4.16 லட்சம் மதிப்பீட்டில் பெண்கள் மற்றும் ஆண்கள் கழிப்பறை அமைக்கும் பணியினையும், சித்தளி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ரூ.4.16 லட்சம் மதிப்பீட்டில் ஆண்கள் கழிப்பறை அமைக்கும் பணியினையும், சித்தளி ஊராட்சி பிசிமயான பாதையை ரூ.16.00 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலையாக மேம்படுத்தும் பணியினையும், சித்தளி ஊராட்சி நடுத்தெருவில் சுதா வீடு முதல் மாலதி வீடு வரை ரூ.6.15 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி என மொத்தம் ரூ.4.86 கோடி மதிப்பீட்டில் 26 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த காலத்திற்குள் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

இவ்வாறு தெரிவித்தார்.

குன்னம் பேருந்து பணிமனைக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்திடும் விதமாக ஊராட்சி பொது நிதியில் ரூ.6.58 லட்சம் மதிப்பீட்டில் புதிய பைப் லைன் மற்றும் தரைத்தளம் நீர்த்தேக்க தொட்டி அமைப்பதற்கு பேருந்து பணிமனையில் அடிக்கல் நாட்டினார்.

இதில்,மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல்பிரபு , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பா.துரைசாமி, மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் திருமதி.மரகதவல்லி குன்னம் துணை மேலாளர் சுரேஷ் பார்த்திபன், கிளை மேலாளர்கள் எட்வர்ட் கென்னடி, குணசேகரன், வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறிவழகன், சேகர், குன்னம் வட்டாட்சியர் சின்னதுரை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.க.
இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

திருநெல்வேலி மத்திய மாவட்ட

நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
19.07.2025 சனிக்கிழமை	மாலை 6.00 மணி	திருநெல்வேலி மத்திய	ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை.

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–9–இல் கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு மற்றும் திருநெல்வேலி மத்திய ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

நாள்	நேரம்	சட்டமன்றத் தொகுதி	இடம்
19.07.2025 சனிக்கிழமை	காலை 9.00 மணி	ராதாபுரம்	எம்.எஸ்.மஹால், வள்ளியூர்.
20.07.2025 ஞாயிற்றுக்கிழமை	காலை 9.00 மணி	பாளையங்கோட்டை	ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை.
	மாலை 4.00 மணி	திருநெல்வேலி	ஏ.ஆர்.திருமண மண்டபம், சங்கரன்கோவில் சாலை, கானார்பட்டி, மானூர்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 09.07.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி